# இணைப்பு - 1.3

## மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பதவி காலம் ஆறு மாத காலத்திற்கு நீட்டித்து பிறபிக்கப்பட்ட அரசு ஆணை.

(அரசு ஆணை (நிலை)எண்.100, ஊரக வளர்ச்சி(சி1) துறை, நாள் 22.5.1998)


சுருக்கம்

ஊராட்சிகள்- மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய முதல்நிலை குழு அமைக்கப்பட்டது - குழுவின் பதவி காலம் நீட்டிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.


---

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.320, ஊ.வ.துறை, நாள் 11.11.97.
2. அரசு ஆணை (நிலை) எண்.78 ஊ.வ.துறை , நாள் 28.4.98.

ஆணை:

பார்வையில் படிக்கப்பட்ட அரசு ஆணை ஒன்று மற்றும் இரண்டில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு சட்டமன்றத்தில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் பிரதிநிதிகளாக கீழ்கண்ட நபர்களைக் கொண்டு முதல்நிலைக் குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

| உறுப்பினர்களின் பெயர்கள் | சார்ந்துள்ள கட்சி |
|---|---|
| 1.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் | தி.மு.க. |
| 2.திரு.பரமத்தி சண்முகம் | தி.மு.க. |
| 3.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 4.திரு.என்.ஆர்.அழகர்ராஜா, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 5.திரு.எம்.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர் | இ.தே.லீக். |
| 6.திரு.சொ.கருப்பசாமி, சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.அ.தி.மு.க. |
| 7.திரு.ஏ.இராசேந்திரன் (எ) தீரன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க.(2) |
| 8.திரு.இலா.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர் | அ.இ.பா.பிளாக் |
| 9. டாக்டர் கே.கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர் | புதிய தமிழகம் கட்சி |
| 10.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க.(1) |
| 11.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 12.திரு.ஏ.எம்.கோபு | இ.க. |
| 13.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |
| 14.டாக்டர் வா.மைத்ரேயன் | பா.ஜ.க. |

2. இக்குழு தனது அறிக்கையை ஆறு மாத காலத்திற்குள் அரசுக்கு அளிக்க வேண்டும். இக்குழு இது வரை மூன்று முறை கூடி 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டத்தில், பட்டியல்-IVல் கண்டுள்ள 29 இனங்களில் ஐந்து இனங்கள் மீது விவாதித்து தனது கருத்தை தெரிவித்துள்ளது. இந்நிலையில் இக்குழுவின் ஆறு மாத பதவிக்காலம் 10.5.98 உடன் முடிவடைந்தது.

3. 1994ம் ஆண்டு ஊராட்சிகளின் சட்டம், பட்டியல் IVல் குறிப்பிடப்பட்டுள்ள மீதமுள்ள இனங்களில் கண்டுள்ள பொருள்கள் மீது குழு விவாதித்து கருத்து தெரிவிக்க வேண்டியுள்ளதால் குழு தனது பணியை தொடர்வது அவசியம் என்று அரசு கருதுகிறது. எனவே இக்குழுவின் பதவிகாலத்தை நீட்டிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இக்குழுவின் பதவிகாலத்தை 11.5.98 முதல் மேலும் ஆறு மாத காலத்திற்கோ அல்லது குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்கும் வரையிலோ இதில் எது முந்தியோ அதுவரை நீட்டித்து அரசு ஆணையிடுகிறது.

4. 11.5.98 முதல் இவ்வாணை வெளியிடும் நாள் வரை இக்குழு தொடர்ந்து பணிபுரிந்து வந்தமைக்கு பின்னேற்பு ஆணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இக்குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் பயணப்படி மற்றும் தினப்படி ஆகியவை 1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊதியம் வழங்குதல் கூட்டத்தின்படியும், சட்டமன்ற உறுப்பினர் அல்லாத உறுப்பினர்கள் தமிழ்நாடு பயணப்படிகள் விதி பாகம், II, விதி 11(2)ன் கீழும் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்ட மற்றும் இனி மேல் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்ளும் நாட்களுக்கு கீழ் பெற தகுதியுடையவராவர். இதற்கு ஆகும் செலவினங்கள் கீழ் கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"3451-00 தலைமைச் செயலகம், பொருளாதாரப் பணிகள் -
090 - தலைமைச் செயலகம் - I திட்டத்தில் சேராதது -
AE - ஊரக வளர்ச்சித் துறை - 34 ஏணைய செலவுகள்
01 - ஏனைய இனங்கள் (DPC.3451-00-090-AE-3410)"

6. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.
(அ.சா.கு.எண்.1873/FS/P/98, நாள் 5.5.98)

(ஆளுநரின் ஆணைப்படி)

இரமேஷ் சந்திர பண்டா,
அரசுச் செயலாளர்.